பேரூராட்சி அலுவலகம்,
சேத்தியாத்தோப்பு.

<u>ந.க.எண். அ1 /39 / 2010</u> <u>நாள் : 15.06. 2010</u>

# <u>குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

1. சேத்தியாத்தோப்பு பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட இதன் கீழ் இணைப்பில் கண்ட வேலைகளை செய்துமுடிப்பதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 02.07.2010 **வெள்ளி கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளிகள் சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் எந்த திட்டத்தில் எந்த வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் என்பது தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி நமூனாவின் தொகையை இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பேரூராட்சி அலுவலகத்தில் **01.07..2010 பிற்பகல் 5.00 மணிக்குள்** அலுவலக நேரத்தில் ரொக்கமாக செலுத்தி ரசீது பொற்றுக் கொள்ள வேண்டும்.

4. தேசீய பத்திரங்கள் இணைக்கப்பட்டால் அவைகளை ஒப்பந்ததாரர்கள் செயல் அலுவலர் பேரூராட்சி அலுவலகம், சேத்தியாத்தோப்பு அவர்களின் பெயருக்கு அஞ்சல் அலுவலகத்தில் அடமானம் செய்து கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படாமல் இணைக்கப்படும் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பத்திரங்கள் **01.06.2010**–க்கு பின் வழங்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

5. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் இலாக்கா சம்மந்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலையினை செய்து முடிப்பதாக ரூ.20/–. மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளிகளை ஷெட்டியூல் அடிப்படையில் கோரப்படுகிறது.

7. ஷெட்டியூல் ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் 01..07.2010 **பிற்பகல் 5.00 மணி** வரை ஷெட்டியூல் பெற்றுக்கொள்ளலாம். வேலைக்கான டேவணித் தொகையை 02.07.2010 **பகல் 12.00 மணிக்குள்** செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

8. பெறப்பட்ட ஷெட்டியூல் டெண்டர் விண்ணபங்கள் 02.07.2010 **பிற்பகல் 3.30 மணிக்கு** ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் திறக்கப்படும்.

9. ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையை ஒப்பந்ததாரரே செய்து முடிக்க வேண்டும், கீழ் குத்தகைக்கு விடக்கூடாது.

10. காலந்தவறி வரும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் டேவணித்தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

11. ஒப்பந்ததாரர்கள் செயல் அலுவலர் குறிப்பிடும் இடத்தில் இருந்து இலாக்கா மூலம் வழங்கும் வேலைக்கான பொருள்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. ஒப்பந்ததாரர்களுக்கு வேலை செய்ய ஆணை கிடைத்தவுடன் 3 தினங்களுக்குள் ரூ. 20/–க்கு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்து வேலையை துவங்கி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் அறிவிப்பின்றி வேலை உத்திரவு ரத்து செய்யப்படும். அதன்பின் மீதமுள்ள வேலையை செய்து முடிக்க ஏற்படும் கூடுதல் செலவினம் மற்றும் உண்டான சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

13. மூடி மூத்திரையிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. இலாக்கா மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு ஒப்பந்த நமுனாவில் குறிப்பிட்டுள்ளவாறு கிரையத்தொகை பிடித்தம் செய்யப்படும்.

15. வேலைகளுக்கான டேவணித்தொகை 3 % சதவிகிதம் செலுத்த வேண்டும். 1 % சதவிகிதம் டெண்டர் கோரும் போது செலுத்த வேண்டும். மீதமுள்ள 2 % சதவிகிதம் வேலைக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

( த. பி. பா….2…)

16. அட்டவணையில் குறிப்பிட்ட காலக் கெடுவிக்குள் பணிகளை செய்து முடிக்கக் தவறினால் கீழ்க்கண்டவாறு அபராதத் தொகை வசூலிக்கப்படும்.

1) முதல் 15 நாட்கள் : ஒப்பந்தத் தொகையில் 1 %.
2) 15 முதல் 30 நாட்கள் : ( 1% ப்ளஸ் 2% ) ஒப்பந்த தொகையில் 3 %.
3) 30 முதல் 45 நாட்கள் : ( 3% ப்ளஸ் 2% ) ஒப்பந்த தொகையில் 5 %.
4) 45 நாட்களுக்கு மேல் : ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

17. பணி பட்டியலில் வேலையின் மதிப்புக்கு வருமான வரி 2% , வருமான மேல்வரி 12 ½ % , விற்பனைவரி 2% , விற்பனை மேல் வரி 5% பிடித்தம் செய்யப்படும். பணிகளின் மதிப்பட்டுக்கு 0.3% தொழிலாளர் நல நிதி வாரியத்திற்கு தொகை பிடித்தம் செய்யப்படும் .

18. ஒப்பந்தத்திற்காக செலுத்திய வைப்புத்தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் திரும்ப வழங்கப்படும்.

19. பணவரம்பு உள்ளவர்கள் மட்டுமே டேவணித்தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டும்.

20. மற்ற விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

21. ஒப்பந்தப்புள்ளிக்கான தேதியை ஒத்தி வைக்க செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

22. பணிகளின் மதிப்பீடு ரூ. 5.00 லட்சத்திற்குள் உள்ள ஷெட்யூல்களை www.tn.nic.in என்ற இணைய தளத்திலும், பணிகளின் மதிப்பீடு ரூ. 5.00 லட்சம் முதல் 10 லட்சம் வரை உள்ள ஷெட்யூல்களை www.townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்திலும், பணிகளின் மதிப்பீடு ரூ. 10.00 லட்சத்திற்கு மேல் உள்ள ஷெட்யூல்களை www.tenders.tn.gov.in என்ற இணையதளத்திலும் ஷெட்யூல்களை பெற்றுக் கொள்ளலாம்.

## வேலைகளின் விபரம்

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ( ரூ ) | டேவணி தொகை ( ரூ ) | ஷெட்யூல் கட்டணம் ( ரூ ) | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| | **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2010 -2011 அ1/ 39 /2010** | | | | |
| 1. | முருகன் கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 7,20,000/- | 7200 | 1560 | 75 நாட்கள் |
| 2 | வடக்கு மேட்டுத் தெரு தார் சாலை அமைத்தல் | 2,80,000/- | 2800 | 780 | 60 நாட்கள் |
| 3 | பேரூராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் கட்டடம் கட்டுதல் மற்றும் அலுவலக மேம்பாடு செய்தல் | 12,00,000/- | 12000 | 6240 | 120 நாட்கள் |
| 4 | கிளாங்காடு காலனி குளம் மேம்பாடு செய்தல் | 7,00,000/- | 7000 | 1560 | 90 நாட்கள் |
| 5 | கிளாங்காடு காளியம்மன் கோயில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 6,50,000/- | 6500 | 1560 | 75 நாட்கள் |
| 6 | பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்டுதல் | 11,50,000/- | 11500 | 6240 | 120 நாட்கள் |
| 7 | கிளாங்காடு சுடுகாட்டுக்கு சுற்று சுவர், அணுகு சாலை, தண்ணீர் வசதி செய்தல் | 7,00,000/- | 7000 | 1560 | 90 நாட்கள் |
| 8 | கனகரத்தினம் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 4,00,000/- | 4000 | 780 | 60 நாட்கள் |
| 9 | சென்னிநத்தம் சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் | 6,00,000/- | 6000 | 1560 | 75 நாட்கள் |
| 10 | ஆசிரியர் நகர் சிறுபாலம் அமைத்தல் | 2,00,000/- | 2000 | 780 | 60 நாட்கள் |
| 11 | சார்பதிவாளர் அலுவலக தெரு வடிகால் அமைத்தல் | 4,00,000/- | 4000 | 780 | 60 நாட்கள் |
| | **மொத்தம்** | **70,00,000/-** | | | |

செயல் அலுவலர்,
பேரூராட்சி அலுவலகம்,
சேத்தியாத்தோப்பு.

## பெறுதல் :

சேத்தியாத்தோப்பு பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், மற்றும் உறுப்பினர்கள்.

சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும்.

## நகல் :

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மாவட்டம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. சட்டமன்ற உறுப்பினர் , புவனகிரி தொகுதி , புவனகிரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் ( பேரூராட்சிப் பணிகள்) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
6. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், வடலூர்/ கெங்கைகொண்டான்/குறிஞ்சிப்பாடி/ஸ்ரீ முஷ்ணம் / விளம்பரம் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. இளநிலைப் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், வடலூர் தகவலறிய.
8. கிராம நிர்வாக அலுவலர், சேத்தியாத்தோப்பு விளம்பரப் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
9. உதவி ஆய்வாளர், காவல்துறை , சேத்தியாத்தோப்பு
10. உதவி அஞ்சல் அலுவலர், அஞ்சல் அலுவலகம், சேத்தியாத்தோப்பு
11. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
12. கோப்புக்கு.

## சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு. த.சக்கரவர்த்தி,

**ந.க.எண். அ1 /88/ 2009** **நாள் : 5.08. 2009**

பொருள் : மாவட்ட ஆட்சியரின் இயக்குதலும் மற்றும் பராமரிப்பு நிதி திட்டம் 2009 – 2010 – சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பணிகள் – அட்டவணை ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியை நிறைவேற்ற உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை : 4. 08. 2009 அன்று பெறப்பட்ட M.B . வேல்முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி.

2. இதர ஆவணங்கள்.

உத்திரவு:

2009 - 2010 ம் ஆண்டு மாவட்ட ஆட்சியரின் இயக்குதலும் மற்றும் பராமரிப்பு நிதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு கடந்த **4.08.2009** அன்று பெறப்பட்ட அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகளில், தாங்கள் அளித்த ஒப்பந்தப்புள்ளி **0.04%** மதிப்பீட்டிற்கு குறைவாக உள்ளதை ஏற்று அப்பணியினை செய்துமுடிக்க இதன் மூலம் தங்களுக்கு உத்திரவு வழங்கப்படுகிறது. இவ்வுத்திரவு கிடைக்கப்பெற்ற **3** தினங்களுக்குள் ரூ. 20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் பணியினை செய்து முடிப்பதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்து பணியை துவக்க வேண்டும். குறிப்பிட்ட காலகெடுவிற்குள் தங்கள் பணியினை செய்து முடிக்கத்தவறினால், தங்களுக்கு அளிக்கப்படும் இப்பணி உத்திரவு ரத்து செய்யப்படுவதுடன், அதனால் ஏற்படும் சகலவிதமான நஷ்டங்களுக்கும் தாங்களே பொறுப்பாவீர்கள் என்றும் இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. பணி நிறைவேற்ற தேவைப்படும் பொருட்களான சிமெண்ட், கம்பி, தார், பி.வி.சி. பைப் ஆகியவை ஒப்பந்ததாரரே தங்கள் பொருப்பில் வாங்கி, அதற்கான ரசீதினை பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்திய டேவணித் தொகை ஆண்டுத் தணிக்கை முடிவுற்ற பின்னர் தங்களுக்கு திருப்பி அளிக்கப்படும்.

| வ.எண். | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை | வேலையை செய்து முடிக்க தொகை வேண்டிய காலம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளாற்றாங்கரையில் உள்ள இரண்டாவது கிணற்றிலிருந்து பைப் லைன் அமைத்தல் . | 1,00,000 | **30 நாட்கள்** |

**குறிப்பு** : மேற்குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் பணிகளை செய்து முடிக்க தவறினால் கீழ்கண்டவாறு அபராத தொகை வசூலிக்கப்படும்.

1. முதல் 15 நாட்கள் : ஒப்பந்ததொகையில் 1%.
2. 15 முதல் 30 நாட்கள் : (1% + 2% ) ஒப்பந்ததொகையில் 3%.
3. 30 முதல் 45 நாட்கள் : (3% + 2%) ஒப்பந்ததொகையில் 5%.
4. 45 நாட்களுக்கு மேல் : ஒப்பந்தப்பதிவு ரத்து செய்யப்படும்.

பெறுதல்:

திரு M.B . வேல்முருகன்
ஒப்பந்ததாரர்,
மஞ்சக்கொல்லை .

செயல் அலுவலர் ,
பேரூராட்சி அலுவலகம்,
சேத்தியாத்தோப்பு

நகல் : மாவட்ட ஆட்சித்தலைவர்,கடலூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் : திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , கடலூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல் : கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல் : உதவி செயற்பொறியாளர், பேரூராட்சி பணிகள், கடலூர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல் : இளநிலைப்பொறியாளர், பேரூராட்சி பணிகள், வடலூர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

பேரூராட்சி அலுவலகம்,
சேத்தியாத்தோப்பு
நாள்:– 11. 06. 2009

# தீர்மான நகல்

2009 ம் ஆண்டு ஜுன் மாதம் 11– ம் நாள் வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு சேத்தியாத்தோப்பு பேரூராட்சியின் சாதாரணக்கூட்டம் தலைவர் திரு. **பட்டு, கணேசன்,** அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:– திரு . பட்டு . கணேசன் அவர்கள்,**
**தலைவர் மற்றும்**
**14 வார்டு உறுப்பினர்கள்**

## பொருள் எண் : 09

சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் 2009–2010 ஆம் ஆண்டு இயக்ககம் மற்றும் பராமரிப்பு நிதி திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ரூ.1.00 லட்சத்திற்கு குடிநீர் பணிகள் மற்றும் புதிய தெருவிளக்குகள் அமைத்தல் பணிகளை தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வெள்ளாற்றங்கரையில் II–வது கிணற்று போர் சீர் செய்தல் | **1,00,000** |
| | **மொத்தம்** | **1,00,000** |

## தீர்மானம் எண் : 291

அங்கீகரிக்கப்பட்டது.

(ஒம்) பட்டு . கணேசன்
தலைவர்
பேரூராட்சி மன்றம்
சேத்தியாத்தோப்பு

// உண்மைநகல் //

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
சேத்தியாத்தோப்பு

## சேத்தியாத்தோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு. த.சக்கரவர்த்தி,

**ந.க.எண். அ1 /      / 2009**                                                    **நாள் :**

பொருள் :

2009 – 2010 – சேத்தியாத்தோப்பு பேரூராட்சி பணிகள் – அட்டவணை ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியை நிறைவேற்ற உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை : அன்று பெறப்பட்ட அவர்களின் ஒப்பந்தப்புள்ளி.

2. இதர ஆவணங்கள்.

**உத்திரவு:**

2009 - 2010 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு கடந்த அன்று பெறப்பட்ட அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகளில், தாங்கள் அளித்த ஒப்பந்தப்புள்ளி ____________ மதிப்பீட்டிற்கு குறைவாக உள்ளதை ஏற்று அப்பணியினை செய்துமுடிக்க இதன் மூலம் தங்களுக்கு உத்திரவு வழங்கப்படுகிறது. இவ்வுத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ரூ. 20.00 மதிப்புள்ள முத்திரைத்தாளில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் பணியினை செய்து முடிப்பதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்து பணியை துவக்க வேண்டும். குறிப்பிட்ட காலகெடுவிற்குள் தங்கள் பணியினை செய்து முடிக்கத்தவறினால், தங்களுக்கு அளிக்கப்படும் இப்பணி உத்திரவு ரத்து செய்யப்படுவதுடன், அதனால் ஏற்படும் சகலவிதமான நஷ்டங்களுக்கும் தாங்களே பொறுப்பாவீர்கள் என்றும் இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. பணி நிறைவேற்ற தேவைப்படும் பொருட்களான சிமெண்ட், கம்பி, தார், பி.வி.சி. பைப் ஆகியவை ஒப்பந்ததாரரே தங்கள் பொருப்பில் வாங்கி, அதற்கான ரசீதினை பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்திய டேவணித் தொகை ஆண்டுத் தணிக்கை முடிவுற்ற பின்னர் தங்களுக்கு திருப்பி அளிக்கப்படும்.

| வ.எண். | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை | வேலையை செய்து முடிக்க தொகை வேண்டிய காலம் |
|---|---|---|---|
| 1 | | | |

**குறிப்பு** : மேற்குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் பணிகளை செய்து முடிக்க தவறினால் கீழ்கண்டவாறு அபராத தொகை வசூலிக்கப்படும்.

1. முதல் 15 நாட்கள் : ஒப்பந்ததொகையில் 1%.
2. 15 முதல் 30 நாட்கள் : (1% + 2% ) ஒப்பந்ததொகையில் 3%.
3. 30 முதல் 45 நாட்கள் : (3% + 2%) ஒப்பந்ததொகையில் 5%.
4. 45 நாட்களுக்கு மேல் : ஒப்பந்தப்பதிவு ரத்து செய்யப்படும்.

பெறுதல்:

செயல் அலுவலர் ,

ஒப்பந்ததாரர், பேரூராட்சி அலுவலகம்,

சேத்தியாத்தோப்பு

நகல் : மாவட்ட ஆட்சித்தலைவர்,கடலூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல் : திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , கடலூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல் : கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
நகல் : உதவி செயற்பொறியாளர், பேரூராட்சி பணிகள், கடலூர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல் : இளநிலைப்பொறியாளர் , பேரூராட்சி பணிகள் , வடலூர் தகவலுக்காக அனுப்பப்படுகிறது .